# மாதாந்த அறிக்கை

ஆனி, 2015

## Social Organizations Networking for Development

*T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk/online/*

*Face book:- [www.facebook.com/sondngo?fref=ts](www.facebook.com/sondngo?fref=ts)*

**RKM Road Akkaraipattu**

**No. 19, Saravana Road Kallady Batticaloa.**

**435/09 A, temple road Nallur, Jaffna**

இதழின் உள்ளே

1. மட்டக்களப்பு
2. அம்பாறை
3. யாழ்
4. மன்னார்

ஆகிய நான்கு மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

**"We all will Create a Better World"**

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.**

**(Create a Conducive Society for Good Environment for the Future).**

## காலநிலை மாற்றக் குழுக்கலந்துரையாடல்.

காலநிலை மாற்றம் பற்றிய குழுக் கலந்துரையாடல் இம் மாதம் 18.06.2015 ம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பு SOND நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் தலைமையில் மட்டக்களப்பு SOND அலுவலகத்தில் நடைபெற்றது.

காலநிலைமாற்றம் பற்றிய தெளிவுபடுத்தல் பல மட்டங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் மட்டக்களப்பில் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்கள் குறித்து மாவட்ட செயலாளரை சந்திப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந் நிகழ்வில் ஒரு பகுதியாக SOND நிறுவனம் சார்பாக காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யும் திரு. ரமேஸ்வரன் அவர்கள் பகுப்பாய்விற்குத் தேவையான தகவல்களை உறுப்பினர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

## பாடசாலை மட்டத்திலான காலநிலை மாற்ற விழிப்புணர்வு

கல்லடி விவேகானந்தா பாடசாலையில் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு 03.06.2015 திகதி 12.00 மணிக்கு நடாத்தப்பட்டது. 350 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்





**“We all will Create a Better World”**

SOND

## அபிவிருத்தியில் அரசுசாரா பங்குதாரர்கள் திட்டம் (NSA)

திட்டதின் கீழ் செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராமங்களில் கிராமமட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதுடன் சனசமூக நிலையங்களை புனரமைத்து இவற்றின் செயற்பாடுகளை அதிகரித்து கிராமமட்ட அபிவிருத்தியினை தடையின்றி மேற்கொள்ள உதவுதல் எனும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டு கீழ்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

இப் பிரதேசத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட 7 சனசமூகநிலைய உறுப்பினர்களைச் சந்தித்து அக் குழுக்களில் தற்போதைய நிலை தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் சனசமூக நிலையங்களை புணரமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் மரப்பாலம், ராஜபுரம் மாவளையாறு, சின்னப்புல்லுமலை, பங்குடாவெளி, கரடியனாறு ஆகிய கிராமங்களில் இடம்பெற்றது. மேலும் கிராமமக்களை இத் திட்டத்தினுள் உள்வாங்கிக் கொள்ளும் நோக்கில் கிராம மக்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் இளையோருடனான சந்திப்புக்கள் என்பன கொடுவாமடு, தளவாய், பெரியவெட்டுவான், பெருமாவெளி, இலுக்குப் பொத்தானை, கரடியன்குளம் ஆகிய கிராமங்களில் இடம் பெற்றது.

செயற்திட்டம் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.



# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.**
**Create a Conducive Society for Good Environment for the Future).**

2015.06.19 ம் திகதி விவசாய அமைப்புகளுக்கான சம்மேளனம் அமைப்பது தொடர்பான முதற் கட்டக் கலந்துரையாடல் அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் திட்ட இணைப்பாளர் விஜயகுமார் அவர்களால் நடாத்தப்பட்டது இதில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் செயற்படும் 5 விவசாய உற்பத்தியாளர் சங்கத்தின் 9 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்

## பாலர் பாடசாலை

அம்பாறை மாட்டத்தில் SOND அமைப்பின் கீழ் செயற்படும் பாலர் பாடசாலைகளின் முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு கடந்த 15.06.03ம் திகதி அன்று மாலை 03.00 மணிக்கு பாலர்பாடசாலை ஆசிரியர்களுக்கான கலத்துரையாடலானது திட்ட உத்தியோகத்தர் தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

கலந்துரையாடலில் 12 முன்பள்ளியைச் சேர்ந்த 22 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். மேலும் 2015.06.25 ம் திகதி அன்னை, சரஸ்வதி, கலைமகள் அம்மன் ,காந்தி, அம்மன் ஆகிய பாலர் பாடசாலைகளுக்கான களவிஜயமும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.




**“We all will Create a Better World”**

SOND

# நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற் திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் செயற்றிட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண், 29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள். இம் மாதம் 3 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட போது 33 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 55 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.

காந்தி கழகத்தில் புதிதாக இணைந்துள்ள 7 சிறுவர்களுக்கு கழக நடைமுறைகள் பற்றி கூறப்பட்டு விளங்கப்படுத்தப்பட்டது.

பாடசாலை இரண்டாம் தவணை பரீட்சை விடுமுறை காலங்களில் அனைத்து சிறுவர்களும் எமது அலுவலகத்திற்கு வருகை தந்து பாவனைக்குதவாத கடதாசிகளைப் பயன்படுத்தி மாத்திரைப் பைகள் தயாரித்து வைத்தியசாலைக்கு வழங்குமாறு கூறப்பட்டது.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் 4 நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 160 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கிரிக்கெட் வெட் ஆகிய விளையாட்டுப் பொருள் 07 தடவைகள் வழங்கப்பட்டது.

## விவசாயப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் பண்ணையில் நாற்று மேடையில் பழமரக்கன்றுகள் உற்பத்தி பண்ணப்பட்டு, தென்னை, வாழை, மரக்கறி பழ மரக்கன்றுகள், தானியங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.



## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோரிற்கு 12 தலைப்பில் 173 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## மிதிவெடி அபாயக்கல்வி செயற்றிட்டம்

MRE செயற்பாட்டில் MRE பணியாளர்களினால் சாவகச்சேரி, கோப்பாய், தெல்லிப்பளை ஆகிய 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள எழுதுமட்டுவாள், அக்கரை, கட்டுவன், பளைவீமன்காமம், பலாலிதெற்கு, வளலாய், வயாவிளான் தெற்கு, வறுத்தளைவிளான், வயாவவிளான் ஆகிய 9 கிராம சேவகர் பிரிவுகளின் செயற்பாட்டுப் பிரதேசங்களில் 7 வகையிலான 75 மிதிவெடி அபாயக் கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 07 வெடிக்காதவெடி நிலையில் உள்ளவெடி பொருட்களும் 3 மிதிவெடிகளுமாக 10 வெடி பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக 1499 பேருக்கு இம்முறை பணியாளர்களினால் விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

392 MRE விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

விசேட செயற்பாடாக 2015.06.19 அன்று SLRC யின் அனுசரணையுடன் கிணற்றை துப்பரவு செய்யும் பணியிலீடுபடுபவர்களுக்கான MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடானது வயாவிளான் பகுதியில் பணியாளர்களினால் நடாத்தப்பட்டது.




“We all will Create a Better World”

SOND

## விவசாயப் பண்ணை

யாழ். பல்லப்பை இயற்கை விவசாய பண்ணையில் ஏற்கனவே பயிரிடப்பட்ட பயிர்கள் பராமரிக்கப்படுவதோடு இம்மாதத்தில் தேசி, தக்காளி, இலைக்கோவா, புடோல், பாகல், கறிவேப்பிலை என்பன புதிதாக பயிரிடப்பட்டுள்ளன. அத்தோடு வெங்காயம் 8 பரப்பிலும் மரவள்ளி 3 பரப்பிலும் பயிரிடப்பட்டுள்ளதுடன் போடோக்கலவை ,ஊடகக்கலவை என்பனவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

பூசணி, மிளகாய், பயிற்றை ஆகிய உற்பத்திப் பொருட்கள் அறுவடை செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பண்ணை ஆலோசகரான திரு.பிள்ளை அவர்கள் பண்ணைக்கு வருகைதந்து கரைசல் தயாரிப்பு முறைகள், பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள், பராமரிப்பு முறைகள், பயிர்ச் செய்கை முறைகள் போன்றவை தொடர்பாக பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கியிருந்தார்.





## தகவல் வளநிலையம்

உயரப்புலம் மெதடிஸ்தமிஸன் மகா வித்தியாலயம் இளையதம்பி இந்து மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டமைக்கமைவாக சுய முன்னேற்ற நூல்கள் தமிழ் நாவல்கள் பெரியார் வரலாற்று நூல்கள் கல்விசார்ந்த நூல்கள் ஆங்கில நூல்கள் மற்றும் சமயநூல்கள் என 35 புத்தகங்கள் மக்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

**“We all will Create a Better World”**

# மன்னார் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## அபிவிருத்தியில் அரசசாரா பங்குதாரர்கள் திட்டம் (NSA)

### சமூக அணி திரட்டல்

பயிற்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுதல், சனசமூக நிலையங்களை அமைப்பதற்கான பொருத்தமான உறுப்பினர்களை அடையாளம் காணுதல் போன்ற நோக்கங்களுக்கான மாந்தை மேற்கு, முசலி ஆகியபிரதேச செயலாளர் பிரிவுகளில் 22 கிராமங்களில் உள்ள சமூகமட்ட அமைப்புக்களின் 101 ஆண்களும் 99 பெண்களும் மொத்தமாக 200 உறுப்பினர்கள் அணிதிரட்டப்பட்டுள்ளனர். அவர்களில் 48 உறுப்பினர்கள் முஸ்லீம்களும் 152 உறுப்பினர்கள் தமிழர்களுமாவர்.



## அபிவிருத்தியில் அரசசாரா பங்குதாரர்கள் திட்டம் (NSA)

### மாந்தை மேற்கு பிரதேச சபையுடனான திட்டக் கலந்துரையாடல்.

**மாந்தை மேற்கு பிரதேச சபையுடனான NSA திட்டக் கலந்துரையாடலானது மாந்தை மேற்கு பிரதேசசபையில் 26/06/2015 பி.ப. 3.30 மணிக்கு நடைபெற்றது. பிரதேச சபை சார்பாக செயலாளரும் SOND நிறுவனம் சார்பாக ச. செந்துராசா, க. குந்தவி மற்றும் ஜுனஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.**

**கிராம மட்டத்தில் சனசமூக நிலையங்களை அமைத்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்ட பின்னர் செயலாளர் அதனை ஏற்றுக் கொண்டு செயலாளர் குறிப்பிடுகையில் தங்களுடைய பிரதேச சபைக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் நியமிக்கப்படவில்லை எனவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கலந்துரையாடி அதற்கான ஒழுங்குகளை செயலாளர் மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் July மாதம் 15ம் திகதிநடை பெறவுள்ள அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டத்தின் பொழுது கலந்துரையாடுவதற்காக சனசமூக நிலையங்களை அமைத்தல் தொடர்பிலான ஆவணத்தைத் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.**

# அபிவிருத்தியில் அரசசாரா பங்குதாரர்கள் திட்டம் (NSA)

## அமைப்புக்களுக்கான வலுவூட்டல் பயிற்சிகள்

மாந்தை மேற்கு, முசலி ஆகிய பிரதேசங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதற்காக "சமூகஅணிதிரட்டல், ஆவணப்படுத்தல்" ஆகிய தலைப்புக்களில் நான்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

முசலி பிரதேசத்தில் உள்ள அமைப்புக்களுக்கான ஆவணப்படுத்தல் பயிற்சியானது 26/06/2015 அன்று சவெரியார்புரம் பல்தேவைக் கட்டிடத்தில் வளதாரியான திரு. ச. செந்துராசா அவர்களினால் வழங்கப்பட்டது. 4 ஆண்களும் 13 பெண்களும் மொத்தமாக 17 தமிழ் சமூகத்தினைச் சேர்ந்தோர் பங்குபற்றினார்கள்.

மாந்தை பிரதேசத்தில் உள்ளஅமைப்புக்களுக்கான ஆவணப்படுத்தல், சமூக அணிதிரட்டல் ஆகிய தலைப்புக்களில் 03 பயிற்சிகளானது 13,25,27/06/2015 ஆகிய தினங்களில் ZOA அலுவலகம் பள்ளமடு மற்றும் பெரியமடு பல்தேவைக் கட்டிடம் ஆகிய இடங்களில் வளதாரியான திரு. ச. செந்துராசா அவர்களினால் வழங்கப்பட்டது. 22 ஆண்களும் 39 பெண்களும் மொத்தமாக 44 தமிழ் சமூகத்தினைச் சேர்ந்தோரும் 17 முஸ்லீம் சமூகத்தினைச் சேர்ந்தோரும் பங்குபற்றினார்கள்.



**"We all will Create a Better World"**



## தொலை நோக்கு

**"புதிய சமூகம் உருவாக்குவோம்"**

## பணிநோக்கு

**சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத் திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.**

**"We all will Create a Better World"**

SOND